## IV. ஆளணி

ஆளுநர் திரு. எச். ஈ. தென்னக்கோன், 1973, சனவரி 15ஆந் திகதி பாங்கொக்கில் நடைபெற்ற ஆளுநர்களுக்கான. தென் கிழக்காசிய நியூ சிலாந்து அவுத்திரேலியாவின் 10ஆவது மாநாட்டிற் கலந்து கொள்வதற்குச் சென்று 1973, சனவரி 25ஆந் திகதி இலங்கை திரும்பினர்.

1973, ஏப்பிறல் 15ஆந் திகதி, ரோக்கியோவிற்கு சென்று, அங்கு நடைபெற்ற ஆசிய தீர்ப்பனவுகள் சங்கத்தை நிறுவுதல் பற்றிய உடன்படிக்கையிற் கையொப்பமிட்டபின் 1973, ஏப்பிறல் 26ஆந் திகதி இலங்கை திரும்பினர்.

1973, யூன் 12ஆந் திகதி ஆளுநர் இலண்டன் சென்று ஸ்ரேலிங் எல்லைப் பரப்பு மத்திய வங்கி அலுவலர்களின் மாநாட்டிற் கலந்து கொண்டார். அவர் இலண்டனில் இருக்கும்போது, இலண்டனில் உள்ள வங்கிகளுடன் கலந்துரையாடினர். இதனையடுத்து வாசிங்டன் சென்று, அங்கு நடைபெற்ற பன்னாட்டு நாணய நிதிக் குழுவுடன் கலந்துரையாடிய பின் 1973, யூலை 6ஆந் திகதி இலங்கை திரும்பினர்.

பன்னாட்டு நாணய நிதியில் இலங்கையின் மாற்றுப்பதில் ஆளுநரான, ஆளுநர் கெனியாவில் நைரோபியில் நடைபெற்ற பன்னாட்டு நாணய நிதியினதும், பன்னாட்டுப் புத்தாக்க அபிவிருத்தி வங்கியினதும் ஆண்டுக்கூட்டங்களிற் கலந்துகொண்டார். 1973, செத்தெம்பர் 20ஆந் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்ட இவர் 1973, ஒற்றோபர் 4ஆந் திகதி இங்கு திரும்பினர்.

நிதியமைச்சின் செயலாளர், திரு. சி ஏ. கூறே, பன்னாட்டு நாணய நிதியினதும், பன்னாட்டுப் புத்தாக்க அபிவிருத்தி வங்கியினதும் கூட்டங்களிற் கலந்து கொள்வதற்காக இலங்கையை விட்டு வெளியே சென்றிருந்த காலப் பிரிவில், நிதியமைச்சின் பதில் செயலாளர் திரு. எல். பி. அபயரத்தின செயலாளர் திரு. சி. சி. ஏ. கூறேக்குப் பதிலாகக் கடமையாற்றியதுடன், அவர் நாணயச்சபையின் அலுவலகக் கடமை சார்ந்த உறுப்பினராகவும், அக்காலப் பிரிவிற் கடமையாற்றினர்.

ஆளுநர், இலங்கையில் இல்லாதிருந்த 1973, சனவரி 15ஆந் திகதி தொடங்கி. 1973, சனவரி 25ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் வங்கியில் நாணய விதிச் சட்டத்தின் 24ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைய, துணை ஆளுநர் கலாநிதி காமினி கொரியா, மூத்த துணை ஆளுநராகவும், வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும், கடமையாற்றினர். அவர் 1973, யூன் 1ஆந் திகதியிலிருந்து ஐரோப்பிய பொருளாதாரசமூகத்தில் இலங்கையின் தூதுவராகக் கடமை ஏற்றுர்.

துணை ஆளுநரான கலாநிதி டபிள்யூ. எம். திலகரத்தின, மாற்றுப்பதில் நிறைவேற்றுப்பணிப்பாளராகப் பன்னாட்டு நாணய நிதியிற் தொடர்ந்தும் கடமையாற்றினர்.

ஆளுநர் இலங்கைக்கு வெளியில் இருந்த காலப்பிரிவாகிய 1973, ஏப்பிறல் 16ஆந் திகதி தொடங்கி. 1973 ஏப்பிறல் 26ஆந் திகதிவரை, 1973 யூன் 13ஆந் திகதி தொடங்கி, 1973 யூலை 6ஆந் திகதிவரை, 1973 செத்தெம்பர் 20ஆந் திகதியிலிருந்து, 1973 ஒற்றோபர் 4ஆந் திகதி வரையான காலப்பகுதியிலும், 1973ஆம் ஆண்டில் ஆளுநர் வங்கியிலில்லாதிருந்த 1973 மே 21ஆந் திகதியிலிருந்து 1973 மே 25ஆம் திகதிவரை, 1973 ஒற்றோபர் 17ஆந் திகதியிலிருந்து 1973 ஒற்றோபர் 23ஆந் திகதிவரை, 1973 நவெம்பர் 15ஆந் திகதியிலிருந்து 1973 நவெம்பர் 23ஆந் திகதிவரையிலுமான காலப்பகுதிகளில், நாணய விதிச்சட்டத்தின் 24ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க துணை ஆளுநரான திரு. பி. வி. எம். பர்ணந்து மூத்த துணை ஆளுநராகப் பதவியிலமர்த்தப்பட்டு, தலைமை நிறைவேற்று அலுவலராகக் கடமையாற்றினர்.

ஆளுநரின் உதவியாளரான திரு. க. குணரத்தினம், 1973 ஏப்பிறல் 15ஆந் திகதியிலிருந்து வங்கிப் பணியிலிருந்து விலகிக்கொண்டார்.

திரு. சு. தயாநிதியும், திருமதி. ஏ. எச். டி. சில்வாவும் பன்னாட்டு நாணய நிதியிற் தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றனர். சவுதி அரேபியாவிலுள்ள ஐக்கிய நாடுகள் அவையில் பணிபுரிந்த திரு. பீ. பீ. டி. எம். பெரேரா அவர்கள் 1973ஆம் ஆண்டில் யூலை மாதம் 3ஆந் திகதி தொடங்கி வங்கிப் பணியிலிருந்து விலகினர்.

திரு. ஏ. எஸ். ஜயவர்தன அவர்கள் நிலச் சீர்திருத்த ஆணைக்குழுவின் உறுப்பினராகத் தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றார்.

கலாநிதி எஸ். ரி. ஜி. பெர்ணந்து, முகவர் நிலையங்கள் மீதும், தரகர் நிறுவனங்கள் மீதும் விசாரணை நடத்த அமைக்கப்பட்ட ஆணைக்குழுவின் உறுப்பினராகத் தொடந்தும் பணியாற்றி வருகிறார்.

கலாநிதி ஜி. உச்வத்த ஆராய்ச்சி, ஐக்கிய நாடுகள் சபையிற் தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றார்.

திட்டமிடல் வேலைவாய்ப்பு அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட திரு. என். எம். கப்பகொட 1973, யூலை 31ஆந் திகதி தமது வங்கிப் பணியிலிருந்து விலகினர்.

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட திரு. வி. என். டி. நாணயக்கார, 1973 ஏப்பிறல் 1ஆந் திகதியிலிருந்து வங்கிப் பணியில் மீண்டும் சேர்ந்தார்.

நிதியமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட திரு. பி. எம். நாகாவத்த, 1973 ஏப்பிறல் 1ஆந் திகதி தொடங்கி மீண்டும் வங்கிப் பணியிற் சேர்ந்தார்.

ஆய்வுக்குரிய ஆண்டில் மத்திய வங்கியின் பின்வரும் அலுவலர்கள் அரசாங்கத்திலும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் முழு நேரப் பணியாற்ற விடுவிக்கப்பட்டார்கள்.

திருவாளர்கள் எச். ஆர். டி. சொயிசா, எச். எம். ஆர். எல்லப்பொல ஆகியோர் - நிதியமைச்சு.

கலாநிதி எஸ். எம். பி. சூரியாராய்ச்சி, திரு. பி. எம். ஹசன், கலாநிதி எம். ஏ. பெர்ணுந்து ஆகியோர் பொருளாதாரத் திட்டமிடல் அமைச்சு, (1973, ஒகத்து 1ஆந் திகதியிலிருந்து).

திரு. பி. எச். சிறிவர்த்தன, பொது நிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

திரு. பி. பீ. கரந்தவெல - கப்பல் சுற்றுலா அமைச்சு.

திரு. ரி. ஜி. புஞ்சி அப்புகாமி- அரசாங்க இரத்தினக்கற் கூட்டுத்தாபனம்.

கலாநிதி ஆர். சீ. வணிகதுங்க - பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.